மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கள்ளக்குறிச்சி தொகுதி, அம்மகளத்தூர் அல்லது நாட்டார்மங்கலத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கும்போது, இதுபோன்று நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று கேட்கக் கூடாது. முதலிலே, அங்கே கிளை நிலையம் அமைக்கப்படுமா என்றுதான் கேட்க வேண்டும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்தப் பகுதி, விதிகளுக்குட்பட்டிருக்கும் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக அங்கே கிளை நிலையம் அமைப்பதற்குப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய தாய்மார்களின் வருவாயைப் பெருக்க விலையில்லா 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கி, ஏழைகளின் துயர்துடைத்த தமிழகத்தின் காவல் தெய்வம், எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

எங்களுடைய கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட சின்னசேலம் ஒன்றியத்தில் உள்ள அம்மகளத்தூர், கருங்குழி, உலகியநல்லூர், ஈரியூர், நாட்டார்மங்கலம், தென்சிறுவலூர் ஆகிய கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 500—க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும், கால்நடை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 6 கிலோ மீட்டர் வரை செல்ல வேண்டியிருப்பதால், நாட்டார்மங்கலம் அல்லது அம்மகளத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பு இல்லாவிட்டாலும், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர பரிசீலிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

2012 *ஏப்ரல்* 24]

156—

கூட்டுறவு நூற்பாலை

***777—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் கூட்டுறவு நூற்பாலை தற்போது தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் ஏற்கெனவே ஒரு கூட்டுறவு நூற்பாலை இயங்கி வந்தது. தற்போது அது மூடப்பட்டிருக்கின்றது. அதனை மீண்டும் திறந்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் கேள்வி கேட்டிருந்தேன்.*

விருதுநகர் மாவட்டத்தின் ஒரு பகுதியில் விவசாயத் தொழிலை மேற்கொண்டுவரும் நிலையில், இன்னொரு பகுதியில் சிறிய தொழிற்சாலைகள் நிறைய இயங்கி வருகின்றன. அதேபோன்று, எங்களுடைய மாவட்டம் நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகவும் விளங்கி வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் இயங்கி வந்த கூட்டுறவு நூற்பாலை கடந்த காலம் முதலே மூடப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களோடு இயங்கிவந்த அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டதனுடைய விளைவாக, அங்கே பணிபுரிந்து வந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். எனவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை கூர்ந்து, எங்களுடைய மாவட்டத்திலே

அரசின் சார்பிலே ஏற்கெனவே இயங்கிவந்த அந்தக் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறந்திட ஆவன செய்வார்களா என்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்றும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தரமான நூல் விநியோகம் செய்ய வேண்டிய நோக்கத்துடன் தமிழக அரசின் சார்பில் கூட்டுறவு நூற்பாலைகள் துவக்கப்பட்டன. அதன் ஒரு பகுதியாக, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் கூட்டுறவு நூற்பாலை 1956இல் பதிவு செய்யப்பட்டு, 1961-இல் துவக்கப்பட்டது. ஜவுளித் துறையில் ஏற்பட்ட மந்த நிலையின் காரணமாகவும், பழைய இயந்திரங்களின் காரணமாகவும், அதிகரித்த நஷ்டத்தின் காரணமாகவும் 13 கூட்டுறவு நூற்பாலைகள் நலிவுற்று, தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டதால் மூடப்பட்டன. அதில், ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையும் ஒன்றாகும். இது 1961இல் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் நலிவடைந்ததால் மூடப்பட்டது. இதனால், அரசுக்கு 28.73 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. இதில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு, விருப்ப ஓய்வுத் திட்டத்தின்மூலம் பணப் பயன்கள், பணக் கொடைகள் வழங்கப்பட்டு, அவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த மந்த நிலையின் காரணமாக மீண்டும் ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையை இயக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான பல்வேறு தளவாடப் பொருட்கள், இயந்திரங்கள்*

2012 ஏப்ரல் 24]

கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில் திருடப்பட்டு இருக்கின்றன என்பதை அங்கிருக்கின்றவர்கள்மூலமாக நான் அறிந்திருக்கின்றேன். 100 ஏக்கர் பரப்பளவுள்ள அந்தக் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அங்கிருந்த பொருட்கள் எல்லாம் திருடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தப் பொருட்கள் எல்லாம் இப்போது அந்தக் கூட்டுறவு நூற்பாலையில் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டு இருப்பதன் காரணமாக, அங்கிருக்கின்ற தளவாடச் சாமான்களை எல்லாம் எடுத்துச் சென்று, இயங்கிக் கொண்டிருக்கிற கூட்டுறவு நூற்பாலைக்கு, அதனுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்காக, துறையின் சார்பில் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், ஒரு கூட்டுறவு நூற்பாலையிலிருந்து தளவாடச் சாமான்களை மற்றொரு இடத்திற்கு எடுத்துச்செல்லும்பொழுது, அங்கே இருக்கின்ற காவலாளிகள் வைத்திருக்கின்ற புத்தகத்தில் கையொப்பமிட்டு, அதன் பிறகுதான் அந்த ஆலையிலிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றன. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, பாரதி கூட்டுறவு நூற்பாலை, கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலை, புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலை மற்றும் கிருஷ்ணகிரி கூட்டுறவு நூற்பாலை போன்ற இயங்கிக் கொண்டிருக்கின்ற நூற்பாலைகளில் உள்ள இயந்திரங்கள் பழுதுபடுகின்றபொழுது, மூடப்பட்ட நூற்பாலைகளிலிருந்து பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபோன்ற ஏதாவது தவறுகள் நடந்திருந்தால், துறைக்கு எடுத்துக் கூறுவார்களேயானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்குத் துறை தயாராக இருக்கிறது என்பதை இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், மீதம் இருக்கின்ற

5 கூட்டுறவு நூற்பாலைகளையும், நவீனப்படுத்தி, அதிகமான பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்காகத் துறை சிறப்பான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 13 கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. அதிலே, அச்சன்குளத்திலே இருக்கிற கூட்டுறவு நூற்பாலையை 5 கோடி ரூபாய் செலவில் திறப்பதற்கான ஏற்பாட்டை இந்த பட்ஜெட்டில் அரசு செய்திருக்கிறது. மீதம் இருக்கிற 12 கூட்டுறவு நூற்பாலைகளையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல், மதுரை, மேலூர் கூட்டுறவு நூற்பாலைகளுடைய 50 ஏக்கர் நிலம், அங்கிருக்கிற ஒரு பிரபலமான கிரானைட் கம்பெனிக்கு பல்வேறு அரசியல் பின்புலத்தோடு, மலிவான விலைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதை மீட்டு, இந்த மொத்தப் புனரமைப்புக்குப் பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில், 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அச்சன்குளம் கூட்டுறவு நூற்பாலைதான் கடைசியாக மூடப்பட்டுள்ளது. குறைந்த நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த அச்சன்குளம் கூட்டுறவு நூற்பாலைதான் மூடப்பட்டது. தொழிற்சாலைகளே இல்லாத இராமநாதபுரம் மாவட்டத்தில், தாட்கோ நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலை, இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலையாகும். ஆகவே, குறைந்த நட்டத்தில் கடைசியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நூற்பாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்*

2012 ஏப்ரல் 24]

சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, தாட்கோ நிதியுதவியுடன்—தாட்கோ 5 கோடியே 75 இலட்சம் ரூபாய் நிதியுதவி கொடுத்திருக்கின்றது—இது ஆரம்பிக்கப்படுகின்றபொழுது இந்த மக்களுக்கு சிறப்பாக வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்காகப் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். வரக்கூடிய காலங்களில், இதுபோன்ற சாத்தியக்கூறுகள் இருப்பின், துறை ஆராய்ந்து, மூடிக்கிடக்கின்ற நூற்பாலைகளையும், சிறப்பான முறையில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, பஞ்சாலைகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடிதான் இந்த ஆலைகள் எல்லாம் மூடப்படுவதற்குக் காரணம் என்று சொன்னார்கள்; உண்மைதான். மத்திய அரசாங்கத்தினுடைய புதிய ஜவுளிக் கொள்கையின் விளைவாகவும், மூலப்பொருளான பஞ்சினுடைய விலை அதிகரித்ததன் காரணமாகவும், தமிழகத்தில் பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தமட்டில் மரியாதைக்குரிய, நாம் போற்றக்கூடிய முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பின்தங்கிய மாவட்டங்களில் பல கூட்டுறவு நூற்பாலைகள், 1981 ஆம் ஆண்டிற்குப் பின்னாலே 18 நூற்பாலைகள் உருவாக்கப்பட்டன. இப்பொழுது, அதில் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மீதமிருக்கக்கூடிய 13 கூட்டுறவு நூற்பாலைகளை முழுக்க முழுக்க இயக்கவே முடியாது என்ற நிலையில் இருக்கக்கூடிய ஆலைகளின் இடங்களையெல்லாம் அரசாங்கம் விற்று, புதிதாக ஆரம்பிக்க இருக்கின்ற ஆலைகளுக்குப் புதிய நவீன இயந்திரங்களைக் கொண்டு வந்து, அந்த ஆலைகளை இயக்கி, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய நிலை அரசிடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், இங்கே மதுரை கூட்டுறவு நூற்பாலை பற்றி கேட்டிருந்தார்கள். மதுரை கூட்டுறவு நூற்பாலையினுடைய இடம் முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுடைய புதல்வர் அழகிரியினால் ஆக்கிரமிக்கப்பட்டு, 12 ஏக்கர் நிலம் குறைந்த விலைக்கு அங்கே டாமினுக்கு விற்கப்பட்டது.*

இங்கே மூடிக்கிடக்கின்ற 13 கூட்டுறவு நூற்பாலைகளும் நவீனமயமாக்கப்பட்டு, புதிய இயந்திரங்கள் வாங்கப்பட்டு, வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். தொடர்ந்து வேலைவாய்ப்புகள் கொடுத்து கொண்டிருக்கின்ற ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரிய ஆலோசனையைப் பெற்று, 104 கோடி நிதியைப் பெற்று, சிறப்பான முறையில் ஓடுவதற்குத் தயார் நிலையில் திட்டம் இருக்கின்றது என்பதையும் தெரிவித்து, மீதமிருக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகளை இயக்கி தமிழகத்தில் உள்ள அனைத்து நெசவாளப் பெருமக்களுக்கும் வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

தொழிலாளர் நல நீதிமன்றம்

***811—திரு. சு. ரவி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?